# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24467 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| **முன்னிலை :** | **திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,**<br>**மாநில தகவல் ஆணையர்** |
| **மனுதாரர் :** | **திரு. K.T. தியாகராஜன்,**<br>**த/பெ. திருமலைசாமி முதலியார்,**<br>**174, வெட்டுக்காட்டு வலசு,**<br>**ஈரோடு – 11.** |
| **பொது அதிகார அமைப்பு :** | **பொதுத் தகவல் அலுவலர்,**<br>**பத்திர பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம்,**<br>**120, சாந்தோம் சாலை,**<br>**சென்னை – 600 028.** |

------

மனுதாரர் திரு. K.T. தியாகராஜன் மன்றும் திரு. G. இராமன், மாவட்டப் பதிவாளர் ( பின்பற்றத்தக்க வழி முறைகள் – Guidelines ), பத்திர பதிவுத் துறைத்தலைவர் அலுவலகம், சென்னை இவ்வாணையத்தில் இன்று ( 27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 18.07.09 அன்று 2 மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் கேட்டு மனு செய்துள்ளார். தகவல் கிடைக்காததால் 03.09.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 30.09.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் தகவல் எதுவும் பெறப்படவில்லை என்று தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் 30.07.09 அன்று மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார். உரிய ஆவணங்களை பார்வையிட்டதில் மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மனுதாரர் விசாரணையில் குறிப்பிட்டு என்னுடைய மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் என்று தெரிவித்துள்ளது அனைத்து கோப்புகளுடைய நகல்கள் தரப்பட வேண்டும் என்று தெரிவித்தார். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த சம்பந்தப்பட்ட கோப்புடைய நகல்கள் என கேட்டு தெளிவாக மனு செய்யவில்லை. மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரத்தை அளிக்குமாறு கேட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் நடவடிக்கை எடுத்த விவரங்களை மனுதாரருக்கு தெரிவித்திருந்தும் , விசாரணையின் போது மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கோப்புகளின் முழு நகலும் மனுதாரருக்கு அளிக்கப்பட்டதால் இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**( சு. மோகன தாஸ் )**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 24467/09</u>**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**பத்திர பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம்,**
**120, சாந்தோம் சாலை,**
**சென்னை – 600 028.**

**திரு. K.T. தியாகராஜன்,**
**த/பெ. திருமலைசாமி முதலியார்,**
**174, வெட்டுக்காட்டு வலசு,**
**ஈரோடு – 11.**